1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

6. 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள், சட்டங்கள், **நிர்வாகம்.**

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

“நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள், நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. **52,63,100-க்கு** மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்”

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

‘That the allotment of Rs. 52,63,100 under Demand No. 2 —Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100.’

THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Sir, I move the following cut motion to discuss policy and to stress the need for nationalisation of all private bus transports irrespective of numbers and routes—

‘That the allotment of Rs. 52,63,100 under Demand No. 2 —Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100.’

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, லாரிகளுக்குச் செலுத்தப்படத்தக்க கட்டணங்கள்மீது ரூபாய்க்கு ஐந்து காசு வீதம் வரி விதிக்கப்பட்டதுபற்றி விவாதிக்க—

“நிதிக் கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 52,63,100-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பேருந்துகளானாலும் மற்றவையானாலும் தகுதி சான்றிதழ் (Fitness